பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

23 09 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய ஆயுர்வேத தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

2. சத்தீஸ்கட் மாநிலம் நாராயண்புர் மாவட்டத்தில் முக்கிய நக்சல் தலைவர்கள் 2 பேர் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.

3. சர்வதேச அளவில் எழுந்துள்ள சூழலின் அடிப்படையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இந்தியா - அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட்டன.

4. பங்களாதேஷில் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 179ஆக அதிகரித்துள்ளது.

5. சீனா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Karman Kaur - ரஷ்யாவின் Valeria இணை காலிறுதிக்கு முன்னேறியள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசிய ஆயுர்வேத தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உடல் ஆரோக்கியத்திற்கு ஆயுர்வேதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் தொடர்ந்து 10ஆம் ஆண்டாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

"மக்களுக்காக ஆயுர்வேதம்-பூமிக்காக ஆயுர்வேதம்" என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுகிறது.

கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்துடன் இணைந்து ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியை மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கலந்துகொண்டு தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆயுர்வேத துறையில் சிறப்பான பங்களிப்பு செய்தவர்களுக்கு தேசிய ஆயுர்வேத விருதுகளை அவர் வழங்குகிறார்.

இந்நாளையொட்டி ஆயுர்வேதத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஆயுர்வேத தினம் குறித்து சேலம் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் திரு. புகழேந்தி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**<<<<>>>>**

நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் மேலும் ஒரு மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மகாராஷ்டிரா-சத்தீஸ்கட் எல்லையில் நாராயண்பூர் மாவட்டம் Abujhmad பகுதியில் நக்சல்களின் முக்கியத் தலைவர்களான Katta Ramachandra Reddy, Kadri Satyanarayan Reddy ஆகியோர் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சர்வதேச அளவில் எழுந்துள்ள சூழலின் அடிப்படையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இந்தியா - அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பாக நியூயார்க்கில் நடைபெற்று வரும் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்திற்கு இடையே வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. Marco Rubio-வை சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் தாம் விவாதித்தாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சைகை மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

காது கேளாதோரின் மனித உரிமைகளை உணர்த்துவதில் சைகை மொழியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செப்டம்பர் 23ஆம் தேதியை சைகை மொழி தினமாக ஐ.நா. பொதுச்சபை அறிவித்தது.

"சைகை மொழி உரிமைகள் இல்லாமல் மனித உரிமைகள் கிடையாது" என்ற தலைப்பில் இந்த ஆண்டு சைகை மொழி தின நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற உள்ள இதற்கான நிகழ்ச்சியில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் பெரும் பயன்களை அளிக்கும் என்று பல்வேறு தரப்பினர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் மத்திய அரசின் இந்த நடவடிக்கை அனைவருக்கும் உகந்தது என்று ராமநாதபுரம் மாவட்ட வர்த்தகர்கள் சங்க செயலாளர் திரு. கோவிந்தராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

யூதர்களின் புத்தாண்டு தினமான Rosh Hashanah-ஐ ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி இஸ்ரேல் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புத்தாண்டு அனைவரது வாழ்க்கையிலும் அமைதி, நம்பிக்கை மற்றும் நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

பங்களாதேஷில் டெங்கு காய்ச்சல் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று மட்டும் 12 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 179 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்ததாக கூறியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 740 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் இந்த ஆண்டு டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 48 ஆயிரத்து 800-ஐ கடந்துள்ளதாக பங்களாதேஷ் அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அசாம் மாநிலம் போடோலேண்ட் பிராந்தியத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் 77 புள்ளி 9 சதவீத வாக்குகள் பதிவானது.

கோக்ரஜார், பத்சா, சிராங், உடல்குரி, தமுல்புர் ஆகிய 5 மாவட்டங்களில் நடைபெற்ற இத்தேர்தல் மூலம் 40 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

மொத்தம் 316 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வாக்கு எண்ணிக்கை வரும் 26ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

<<<<>>>>

அசாமில் காலமான பிரபல பாடகர் Zubin Garg-னின் இறுதிச்சடங்கு இன்று பிற்பகல் சோனாபுரில் நடைபெறுகிறது.

அவரது உடலுக்கு ஏராளமானோர் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குவஹாத்தியில் உள்ள அர்ஜுன் போகேஷ்வர் பரு விளையாட்டுத் திடலில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமானோர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் லாத்துர் மாவட்டத்தில் நேற்று பிற்பகல் பெய்த கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு எற்பட்டது.

நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக மஞ்சாரா, Lower Terna மற்றும் Tawarja அணையின் மதகுகள் திறக்கப்பட்டதை அடுத்து ஆறுகளிலும், கால்வாய்களிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதன் காரணமாக Nilanga மற்றும் Ausa வட்டங்களில் பல்வேறு கிராமங்களுக்கான சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

Latur-Zahirabad தேசிய நெடுஞ்சாலை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் ராணுவத்தினரும், தேசியப் பேரிடர் நிவாரணப் படையினரும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Karman Kaur - ரஷ்யாவின் Valeria இணை காலிறுதிக்கு முன்னேறியள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முதல் சுற்று ஆட்டத்தில் பின்லாந்தின் Anastasia - இத்தாலியின் ஜெசிகா இணை காயம் காரணமாக போட்டியில் இருந்து வெளியேறியதை அடுத்து அந்த இணை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

------------

இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

இத்தொடரின் முதல் ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் பெங்களூரு - குஜராத் அணியையும், உத்தரப்பிரதேசம் - தமிழக அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் குஜராத் - தெலுகு அணியையும், ஜெய்ப்பூர் - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

------------

கொரிய ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

------------

புதுதில்லியில் 27ஆம் தேதி தொடங்க உள்ள உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் தொடக்க அணிவகுப்பில் இந்தியாவின் சார்பில் ப்ரீத்தி பால் தேசியக் கொடி ஏந்திச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>